# சங்ககால மக்களின் வாழ்வும் வாழ்வாதாரமும் – ஓர் பார்வை

# Life and Livelihood of Sangam People - A Glimpse

***முனைவர் வெ. நளினி***
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை (EFL)
அறிவியல் மற்றும் மானுடவியல் புலம்
எஸ் ஆர் எம் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் நிறுவனம், சென்னை

**Dr. V. Nalini**
*Assistant Professor, Department of Tamil (EFL)*
*Department of Science and Humanities*
*S.R.M. Institute of Science and Technology*
*Chennai*

**Citation**: Nalini, V. “Life and Livelihood of Sangam People - A Glimpse.” *Journal of Tamil Culture and Literature*, vol. 5, no. 1, 2025, pp. 1-10.

***ஆய்வுச் சுருக்கம்***
*வாழ்க்கைக்கு ஆதாரமாக விளங்கும் மலை, காடு வயல், கடல், மணல் சார்ந்த பகுதிகளை வாழ்வுக்கு ஏற்ற வகையில் பயன்படுத்தி வாழ்ந்தனர். பின்னர் வாழ்வின் அடுத்த கட்டத்தை உணர்த்தும் வகையில் உணவு, உடை, இருப்பிடம் ஆகிய மூன்றையும் கண்டுபிடித்தனர். இம்மூன்றின் தேவையை பூர்த்தி செய்வதன் பொருட்டும், பொருளாதாரத்தை உயர்த்துவதன் பொருட்டும் பல்வேறு விதமான உற்பத்தி முறைகளை கையாண்டுள்ளனர். அவற்றுள் வேளாண்மை செய்தல், வேட்டையாடுதல், வாணிபம் செய்தல் போன்ற முறைகளும் ஒன்றாகும். சங்ககால மக்களின் வாழ்வாதாரம் பற்றிய குறிப்புகள் ஆங்காங்கு சங்க இலக்கியப் பாடல்களில் காணப்படுகின்றன.*
***கலைச்சொற்கள்:*** *ஐம்பூதங்கள், விசும்பு, உணவு, பாதுகாத்தல், தொழில்கள்*

**Abstract**
*The Sangam people utilized regions encompassing mountains, forests, fields, seas, and sandy areas as foundations for their livelihood in ways suited to their survival. Subsequently, they discovered the three essential elements representing the next stage of life: food, clothing, and shelter. To fulfill the needs of these three elements and to enhance their economy, they employed various production methods including agriculture, hunting, and commerce. References to the livelihood of Sangam people can be found scattered throughout Sangam literary compositions.*
***Keywords***: *Five Elements, Space/Sky (Vi-umbu), Food, Protection, Occupations*

**முன்னுரை**

*சங்க கால மக்கள் இயற்கையாகிய ஐம்பூதங்களோடு வாழ்ந்து வந்தனர். அவை நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் முதலியவை. உலகில் உள்ள பொருள்கள் அனைத்தும் ஐம்பூதங்களின் கலவையினாலும் சேர்க்கையினாலும் உருவாகின. ஐந்திணையை அடிப்படையாகக் கொண்டு சங்ககால மக்களின் வாழ்க்கை முறை அமைந்துள்ளது. நிலமும் பொழுதும் முதன்மைப் பொருளாகவும் நிலத்தை ஐவகையாகவும் பிரித்து, அந்நிலத்திற்கு ஏற்ப வாழ்ந்தனர்.*

**ஐம்பூதங்கள்**

*மனித வாழ்வின் அடிப்படை ஆதாரமாக விளங்குவது ஐம்பூதங்கள் ஆகும். நிலம், நீர் காற்று நெருப்பு ஆகாயம் ஆகியன பற்றி பழந்தமிழர்கள் நன்கு அறிந்திருந்தனர். மனிதன் உயிர்வாழ்வதற்கு உணவும் நீரும் அவசியம் அவை உற்பத்தியாகும் இடமான ஐம்பூதங்களும் அவசியம். இதனை தொல்காப்பியம்,*

***நிலம் தீ நீர் வளி விசும் போடைந்து***
***கலந்த மயக்கம் உலகம் ஆதலின் (தொல்., மரபியல், 1589)***

*என்று குறிப்பிடப்பட்டுள்ளது.*

*நிலம், நீர், காற்று, நெருப்பு, விசும்பு இவை ஒன்றிலிருந்து ஒன்று உருவாகும். தோற்றம் வளர்ச்சி நிலை என்பது பழந்தமிழினர் அறிவியல் சிந்தனையோடு அவர்கள் வாழ்வதற்கு தகுந்த இடம் ஐம்பூதம் என்பதனை இதன் மூலம் அறியமுடிகின்றது.*

*இதனை,*

***மண் திணிந்த நிலனும் நிலன் ஏந்திய***
***விசும்பும் விசும்பு வைதரு வளியும் வளி***
***தலைய தீயும் தீ முரணிய நீரும்***
***என்றாங்கு ஐம்பெரும் பூதத்து இயற்கை (புறம்.2-6)***

*என்கிற புறநானூற்று பாடலின் மூலம் பழந்தமிழர்கள் இயற்கையை வாழ்வாதாரத்திற்கு உரிய இடமாக பயன்படுத்தியதை அறியமுடிகிக்கின்றது.*

**நிலம்**

*உயிரினங்கள் தங்கி வாழும் இடத்தை நிலம் என்பர். நிலமானது திணை என்றும் விளக்கப்படுகிறது. நிலப்பரப்பில் வாழ தகுதியான பகுதிகளை ஐவகை நிலமாக பிரித்து கொண்டு சங்க கால மக்கள் வாழ்ந்தனர். உலகத்தில் காணப்படுகின்ற நிலத்தின் தன்மைகளைக் கொண்டதாக மனித உடல் அமைந்துள்ளது. மனித உடலுக்கு தேவைப்படுகின்ற எல்லா சத்து பொருள்களும் மண்ணில் காணப்படுகின்றது. மண் அமைந்த நிலமே முதன்மை பெறுகிறது. மனித வாழ்க்கை முழுவதும் மண்ணை மையமிட்டு அமைந்துள்ளது.*

*“ஞாயிற்று மண்டிலத்தின் அமைந்த மாற்றம் ஏற்பட்டு புவியின் மேற்பரப்புச் சுருங்கியும் விரிந்தும் மாறுபட்ட புவி, உள்ளழுத்தம் காரணமாகவும் கதிரியக்கத்தின் காரணமாகவும் நில அமைப்பாய் உருப் பெற்றது. இதனால் மலைப்பகுதி, சம வெளிப்பகுதி எனும் தன்மையில் நில அமைப்பு மாறுபட்டது. புவிகோள் பெருஞ்சுட்டால் புறத்தில் வெளித் தள்ளப் பட்ட நிலையில் மலை தோன்றுதையும் அதன்பின் மழைநீர், பனி, காற்று முதலியன மலையைக் கரைத்து மண்ணாக ஆக்குவதையும் அறிந்து உலகத் தோற்றத்தில் மலையின் பழமையை அறிவியலாளர் குறிப்பர்.” இத்தன்மையுணர்ந்த தமிழர் நில அமைப்பிற்கேற்ப மலை நின்ற வழி, குறிஞ்சி என்றும் காடு மண்டியவழி முல்லை எனவும், ஆறு பாய்ந்த நெறி மருதம் எனவும், கடல் சார்ந்த இடம் நெய்தல் எனவும் பகுத்துள்ளனர். மேலும் குறிஞ்சியும் முல்லையும் கோடையில் தன்னியல்பு இழக்கும் நிலையைப் பாலை எனவும் பகுத்துக் கொண்டனர். இம்மாறுப்பட்ட சூழல்களுடன் உயிர்சார் காரணிகள் இயையும் பொழுது அவற்றைச் சூழல் மண்டலங்கள் என சூழலியலாளர் பிரிக்கின்றனர். ஆக இன்றைய சூழலியல் பகுக்கும் நிலச்சூழல் மண்டலங்களாக பண்டைத் தமிழர் பகுத்துவைத்துள்ளனர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை என்பவை அடங்க கடற் சூழல்மண்டலமாக நெய்தல் அமைவது கண் கூடு. இவற்றுள் நிலச்சூழல்களுக்குள் அமையும் நன்னீர் சூழல் மண்டலமாய் தனித்து அறியப்படுகிறது.*

***வன்புலம் தழீ இய மென்பால் தோன்றும் (பதிற்., 7-8)***

*எனும் அடியால் பண்டைத் தமிழர் நிலத்தை வன்புலம் என்றும், மென்புலம் என்றும் பகுத்துப் பார்த்துள்ளனர்.*

*முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என வரும் தொல்காப்பிய வைப்பில் முதல் இரண்டும் வன்புலமாகவும், பின்னிரண்டும் மென்புலனாகவும் முறையே அமைந்துள்ளது அறியதக்கது. இயற்கைச் சூழல் அடிப்படையில் வகுக்கப்பட்ட நால்வகை நிலம் இங்கு பயிர் விளைவுக்கேற்ற நோக்கில் இரண்டாகப் பகுக்கப்பட்டிருத்தல் சிறப்பாக குறிப்பிடத்தக்கதாகும். இதனை,*

***மென்பாலன் உடன் அணைஇ***
***வஞ்சிகோட்டு உறங்கு நாரை***
***அறைக்கரும்பின் பூ அருந்தும்***
***வன்பாலன் கருங்கால் வரகின் (புறம்.,384:1-7)***

*என்ற வரிகள் விவரிக்கின்றன. மேலும் இன்றைய சூழலில் மக்கள் தொகை பெருக்கமானது மிகவும் துரிதமாகவே வளர்ச்சி கண்டு வருகின்றது. ஆகையினால் மக்களுக்கான உணவு தேவையோ மிகவும் அதிகமாகவே காணப்படுகின்றது. மக்களுக்கான உணவு தேவைகளை நிறைவு செய்வதற்காக வளமான நிலங்கள் முக்கியப்படுத்தப்படுகின்றன. நிலவளம் நன்றாக காணப்பட்டால் தான் விவசாயம் செழித்து வளர்ந்து, நாட்டில் மக்களுடைய உணவு தேவையையும் பூர்த்தி செய்ய முடியும். மேலும் உலகில் காணப்படக்கூடிய அனைத்து தாவரங்களின் வளர்ச்சிக்கும் நலமான நிலவளம் மிகவும் அவசியமானதாகும்.*

**நீர்**

*நீர் என்பது உயிர் பொருளாகவும் உயிர்களின் உணவுப் பொருளாகவும் பெரிதும் உதவுகின்றது. நீரில்லாமல் உலக உயிர்கள் செடி, கொடிகள் மரங்கள் எதுவும் வாழ இயலாது. உலகில் வாழும் அனைத்து உயிர்கள் இயக்கத்திற்கும் நீரே முதன்மை ஆதாரமாகும். இதனை,*

***நீரி இன்றமையாது உலகினில் யார்யாருக்கும்***
***வான் இன்றமையா தொழுக்கு (குறள்.,20)***

*என்று வள்ளுவரும் நீரின் அவசியத்தை அன்றே சுட்டியுள்ளார்.*

*தண்ணீர் அதிகம் கிடைக்கக்கூடிய மழைக்காலத்தை விட, நீர் கிடைக்காத கோடை காலத்தில் தான் தண்ணீர் தேவை அதிகமாக உள்ளது என்றே சொல்லலாம். நிலத்தடி வறண்டு காணப்படுவதால் நீரின் அளவும் குறைந்து கொண்டே வருகிறது. இதனால் நீரின் மேலான்மையை உயர்த்த வேண்டும்.*

*முன்னோர்கள் நீரைச் சேமிப்பதற்காகத் தான் குளம், ஏறி, கால்வாய் போன்றவற்றை உருவாக்கினார்கள். மழை பெய்யும் போது அந்த நீர் யாருக்கும் உபயோகப்படாமல் கடலில் சென்று கலக்க கூடாது, அதனை சேகரிக்க வேண்டும் என்று குளம், ஏரி, கால்வாய்களை அமைத்தனர். இப்படி குளம், ஆறு, ஏரி, குட்டைகள், ஊருணிகள், அணைகளில் நீர் சேமிக்கப் படுவதனால் நிலத்தடி நீர் மட்டமும் உயரும், நிலம் வறண்டு போவதும் தடுக்கப்படும்.*

***பாடிமிழ் பனிக்கடல் பருகி வலனேர்பு***
***கோடுகொண் டெழுந்த கொடுஞ் செலவு எழிலி***
***பெரும்பெயல் பொழிந்த சிறு புன் மாலை (பட்டினப்.., 126:128)***
***வான் முகந்த நீர் மலைப்பொழியும்***
***மலை பொழிந்தநீர் கடல் பரப்பும்***

***மாரி பெய்யும் பருவம் போல (பட்டினப்.., 126-128)***

*என்று பத்துப்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. நம் சங்கச் சான்றோர் நீரின் முக்கியத்துவம் அறிந்து அதனை பயன்படுத்தியுள்ளமை இங்கு புலப்படுகின்றது.*

**காற்று**

*உலகில் உள்ள அனைத்து உயிர்களும் உயிர் வாழ மிகவும் இன்றியமையாத ஒன்று காற்று. இயற்கையின் முக்கிய நிகழ்வான நீர் சுழற்சியில் காற்றின் பங்கு இன்றியமையாத ஒன்றாகும். காற்று தென்றல் என்றும் அழைக்கப்படுகின்றது. பருவத்தில் வீசும் காற்று மக்களின் வாழ்வுக்கு அடிப்படை தேவையாக இருக்கிறது.*

*இயற்கையின் கூறுகளில் காற்றின் பங்கு கூடுதலானது. மனிதனின் இயக்கத்தையும் உலக உயிர்களின் இயக்கத்தையும் தீர்மானிப்பது காற்றுதான். அதனால் தான் திருமூலர் தம் திருமந்திரத்தில் மூச்சுப் பயிற்சியே உடலைப் பாதுகாத்து வாழ்நாளை நீட்டிக்கும் என்று கூறியுள்ளார். பிற்கால ஔவையார் தம் குறளில் வாயு தாரணை எனும் அதிகாரத்தில்,*

***வாயு வழக்கம் அறிந்து செறிந்தடங்கில்***
***ஆயுள் பெருக்கம் உண்டாம் (ஔவைக் குறள்,49)***

*என்று காற்றின் செயலைச் சிறப்பித்துள்ளார். ஒரு மனிதன் உணவின்றி*

*ஐந்து வாரம் உயிர்வாழ முடியும். நீரின்றி ஐந்து நாள் உயிர்வாழமுடியும்,ஆனால் காற்றின்றி ஐந்து நிமிடம் கூட உயிர்வாழ முடியாது. பருவக் காலங்களில் மேகத்தைக் கொண்டு வந்து மழையைத் தருவது காற்றே. மனித உயிர்வாழ்விற்கு அச்சாணியாய் இருப்பது நீரும் காற்றுமே. காற்றின் ஆற்றலை,*

***வளி மிகின் வலி இல்லை (புறம்.,10)***

*என்று ஐயூர் முடவனார் சிறப்பித்துள்ளார்.*

**தீ பற்றிய செய்திகள்**

*நெருப்பு ஐம்பூதங்களில் ஒன்றாகும். நெருப்பு என்பது வெப்பத்தை அளிக்கவல்லது. அந்த வெப்பம் தான் மனித உடலை சூடாக வைத்திருக்க உதவுகிறது. சங்க கால மக்கள் உணவு தயாரிப்பதற்காக நெருப்பை பயன்படுத்தி வாழ்ந்தனர். உலகத் தோற்றம் உணர்ந்து உரைக்கும் பரிபாடல் வளி ஊழிக்குப்பின்*

***செந்தீச் சுடரிய ஊழியும் (பரி,2:8)***

*என தீ பற்றிய செய்தியைக் குறிக்கின்றது. வளித்தலை இயத் எனப் புறப்பாட்டில் குறிக்கப் பெறும் தீயினது வலியானது.*

***தீ மிகின் மன்னுயிர் நிழற்றும் நிழலும் இல்லை (புறம்., 51:1-2)***

*எனப் பதிவு செய்யப் பெற்றுள்ளது. தீயின் தெறலை உணர்ந்த வேளையில் ஆக்கத்திற்கும் பயன்படுத்தினர். பண்டைத் தமிழர் என்பது காடு கொன்று என்பது தீயிட்டு எனும் பொருண்மையில் உணரப்பட்டு, தீ நாடாக்கும் ஆக்கப்பூர்வப் பணிக்கும் பயன்பட்டமை புலப்படுகின்றன.*

***நறுக்காழ் கொன்று கோட்டின் வித்திய***
***குறுங் கதிர்த் தோரை நெடுங்கால் ஐயவி***
***ஐவன வெண்ணெலொடு அரில் கொள்புநீடி***
***இஞ்சி மஞ்சள் பைங்கறி பிறவும்***
***பல்வேறு தாரமொடு கல்லகத் தீண்டி (மதுரைக் காஞ்சி., 286-209)***

*என மலைமுகடு தீயிட்டு கையகப்படுத்தப்பட்டு அடுக்கடுக்காய் பயிர்கள் விளைவிக்கப் பயன்பட்ட நிலையும் உணர்த்தப்பட்டுள்ளது. காடு படுதீயினால் வருந்திய நிலையும் பல இடங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

**விசும்பு பற்றிய செய்திகள்**

*ஆகாயம் என்கிற ஆற்றல் தான் மனித உடலில் உயிராக உள்ளது. மனித வாழ்வு ஐம்பெரும்பூதங்களோடு கலந்த கலவை என்பதை இது உணர்த்துகின்றது. நிலம் நீர் காற்று நெருப்பு ஆகாயம் இந்த ஐந்தும் கலந்தது தான் சங்க கால மக்களின் வாழ்வாதாரமாகும். விரிகதிர் பரப்பிய வியல் வாய் மண்டிலம் நிலைபெறும் இடமாய் அமையும் விசும்பு,*

***வறிது நிலைஇய காயம் (புறம்., 20:4)***

*மேலே எவ்வித பொருளுமின்றி இருத்தலை புறநானூறு சுட்டுகின்றது.*

*மற்றைய பூதங்கள் விரிதற்கு இடனாய் அமையும் விசும்பு எனும் புரிதலோடு மதுரைக்காஞ்சி,*

***நீரும் நிலனும் தீயும் வளியும்***
***மாக விசும்பொடு ஐந்து உடன் இயற்றிய***
***மழுவாள் நெடியோன் (மதுரைக் காஞ்சி, 453-455)***

*என இறைவனைப் புகழும் முகத்தான் விசும்பின் சிறப்பினைப் புகழ்கின்றது. மேலும் அகல் இரு வானத்து (ம.காஞ்சி 267) என விசும்பின் தன்மையும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் மக்கள் உணவு, உடை, உறையுள், பயிர்த்தொழில், கைத்தொழில், கல்வி, வாணிகம், கலைவளர்ச்சி, சமயத்துறை முதலியவற்றில் நல்லறிவு பெற்று விளங்குதலும் பழகுதலும் ,நாகரிகம், எனப்படும். நாகரிகம் என்பது புற வளர்ச்சியைக் குறிக்கும். அதாவது, மனிதனுடைய அறிவும் அனுபவமும் நுண்பொருள் பண்புகளாக மட்டுமின்றிப் பருப்பொருள்களாகவும் வெளிப்படுகின்றன. உணவு, உடை, உறையுள், சிற்பம், ஓவியம் போன்ற பிற பொருள்கள் வாயிலாகவும் மனிதனின் வளர்ச்சி வெளிப்படுகின்றது.*

**உணவு**

*பண்டைத் தமிழர்கள் அனைவரும் ஒரே வகையான வகைகளை உண்டார்கள் என்று சொல்வதற்கு எவ்விதச் சான்றும் இல்லை. இயற்கையாக அமைந்த நிலப்பாகுபாடுகளில் ஆங்காங்கு கிடைத்த பொருட்களையும், தங்கள் முயற்சியால் தட்பவெப்ப நிலைக்கேற்ப உற்பத்திசெய்த பொருட்களையும் கொண்டு தங்கள் உணவு வகைகளைத் தயாரித்துக் கொண்டார்கள் என்பதற்குச் சங்க இலக்கியங்களில் பல சான்றுகள் உள்ளன. உணவுப் பொருட்களை அப்படியே பச்சையாக உண்ணாமல் நல்ல முறையில் பக்குவம் செய்து, சுவையேற்றி உண்டு மகிழ்ந்திருந்தார்கள் என்பதையும் இலக்கியங்கள்வழி அறியமுடிகிறது. ஔவையாரின் தனிப்பாடல் திரட்டு சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது. இந்நூலில் ‘‘வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும் முரமுரென வேபுளித்த மோரும் - திறமுடனே புல்வேளூர்ப் பூதன் புரிந்துவிருந் திட்டான்ஈ(து) எல்லா வுலகும் பெறும்’’ (முனைவர். சூசை பிரகாசம் பண்டைய தமிழர்களின் உணவு பழக்கவழக்கங்கள், ப.3) என்று பண்டைய தமிழர்களின் உணவு பழக்கவழக்கங்கள் என்ற கட்டுரையில் சூசை பிரகாசம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.*

*மனித வாழ்வில் அடிப்படை தேவைகளுக்கு அதி முக்கியமான மூல ஆதாரம் உணவு உடை இருப்பிடம் இம்மூன்றும் ஐவகை நிலங்களோடும் ஐம்பூதங்களோடும் சார்ந்த உள்ளது.*

*சங்ககால மக்கள் அந்தந்த நிலத்திற்கு ஏற்ப உணவுகளை உற்பத்தி செய்து உண்டனர். இயற்கையாக அமைந்த நிலப்பகுதிகளில் கிடைத்த பொருட்களையும் தங்கள் முயற்சியால் தப்ப வெப்ப நிலைக்கு ஏற்ப உற்பத்தி செய்த பொருட்களைக் கொண்டும் தங்கள் உணவுப் பொருட்களை தயாரித்துக் கொண்டனர். சங்க கால மக்களின் உணவு வகைகள் உடல் நலத்திற்கு ஏற்றவையாக இருந்தன. மேலும் உணவைச் சுவையுறச் சமைப்பதிலும், உண்பதிலும் அம்மக்கள் சிறந்து விளங்கினர்.*

*பெரும்பாலும் அக்காலத்தில் உணவினை நீரிட்டு, அவித்தல், வறுத்தல், சுடுதல் வற்றலாக்குதல், எண்ணெயிலிட்டுப் பொரித்தல், ஊறவைத்தல் போன்ற முறைகளைப் பின்பற்றினர். நற்றினைப் பாடல் ஒன்றில் தலைவி இரவில் வந்த விருந்தினருக்கு நெய் விட்டுக் கொழுப்பு உடைய ஊனைச் சமைக்கின்றாள் என்று குறிப்பு உள்ளது.*

***எல்லி வந்த நல் இசை விருந்திற்கு***
***கிளர் கிழை அரிவை நெய் துழந்து***
***அட்ட விளர் ஊன் அம் புகை எறிந்த***
***நெற்றி சிறுநுண் பல் வியர் பொறித்த***
***குறு நடைக் கூட்டம் வேண்டுவோரே (நற்றிணை.,41 (5,10)***

*அவர்களின் உணவு வகை மக்களின் பருவச் சூழ்நிலை, வாழும் நிலத்தின் தன்மை. விளையுன் பொருள்கள், பொருளாதார நிலை ஆகியவற்றைப் பொறுத்தே அமைகிறது என்று கா.புவனேஸ்வரி, சங்க கால உணவு முறைகள் என்ற கட்டுரையின் மூலம் விளக்குகிறார்.*

*குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த மக்கள் திணைச் சோறு சமைத்து நெய்யில் இறைச்சியை வேகவைத்தும் உண்டு வாழ்ந்தனர். இதனை*

***பரூவுக்குறை பொழிந்த நெய்கண் வேலைசியாடு***
***குரூஉக்கண் இறடிப் பொம்மல் (மலை.க.,168,169)***

*முல்லை நில மக்கள் பசுவின் பாலையும் திணை அரிசி சோறையும் உண்டு வாழ்ந்தனர். மருதநில மக்கள் வெண்சோற்றையும் பீர்க்கங்காயும் சமைத்து உண்டனர்.*

***இருங்காழி உலக்கை இரும்பு முகம் தேய்ந்த***
***அழைப்பு மான் அரிசி அமவை வெண்சோறு***
***சுவைதான் அலவன் கலவை (சிறுபான்., 193 195)***

*நெய்தல் நில மக்கள் மீன்கள் கடல் இறால்களை சமைத்து உண்டனர். அதேபோன்று*

***கடல் இரவின் சூடு நின்றும்***
***வயல் ஆமை புழுக்கு உண்டும் (பட்டினப்பாலை., 63,64)***

*பாலை நில மக்கள் குளுங்கறி கலந்த சோற்றையும் ஆமாவின் குட்டி இறைச்சியும் உண்டனர். இதனை,*

***எயிற்றியர் அட்ட இன்புளிவெண்சோறு***
***தேமா மேனிச் சில்வளை ஆயமொடு***
***ஆமான் குட்டின அமைவரப் பெறுகுவீர் (சிறுபான் 175 - 177)***

*என்ற பாடல் உணர்த்துகிறது.*

*விருந்து, என்ற சொல்லுக்குப் புதுமை என்பது பொருள்.உறவினரும் நண்பரும் அல்லாதவராய் புதியராக நம்மிடம் வரும் மக்களை, விருந்து, என்றனர் தமிழர். அறியாதவர்களையும் அழைத்து உணவளித்து இடமளித்து உபசரித்து மகிழ்ந்தனர் தமிழர்.*

***செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்***
***நல்விருந்து வானத் தவர்க்கு (குறள்.,86)***

*என்கிறார் திருவள்ளுவர் (முனைவர் ஸ்ரீ ராம், பண்டைய கால தமிழர்களின் வாழ்க்கை முறை, ப.6) கள்ளுண்ணும் வழக்கம் பழந்தமிழகத்தில் மிகவும் விரிவாகக் காணப்பட்டது. குறிப்பாக, மன்னர், பாணர், புலவர், கூத்தர், பொருநர், விறலியர் அனைவருமே கள்ளினை உண்டு களித்தனர். இயற்கையாகக் கிடைத்த பனங்கள், தென்னங்கள், ஈச்சங்கள் ஆகியவற்றையும், யவனர்களால் கப்பலில் கொண்டு வரப்பட்ட தேறலையும் (தேறல் - தெளிந்த மது), காய்ச்சி இறக்கிய மதுவையும் உண்டனர். யவனர் இரட்டைப் பிடிச் சாடிகளில் மரக்கலம் வழியே கொண்டு வந்த மதுவை உண்டதற்கான சான்றுகள் அரிக்கமேட்டுப் புதை குழிகளில் காணப்பட்டனஎன்பதனை அறிய முடிகின்றது.*

**உடை**

*மனிதனின் அடிப்படை தேவைகளில் இன்றியமையாதது உடை. ஆதலால் தான் ஆடை இல்லாத மனிதன் அரை மனிதன் என்று குறிப்பிடுகின்றனர். உடை மனிதனின் அடிப்படை தேவையாகவும் பண்பாட்டுச் சின்னமாகவும் விளங்குகிறது. இலக்கியங்களில் உடைகள் பற்றிய பல குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. உடுக்கை, துணி, ஆடை, உடுப்பு, கலங்கம், புடவை, கச்சு என்று பல பெயர்களில் உடையானது அழைக்கப்படுகின்றது. சங்க காலத்தில் தட்பவெட்ப நிலைக்கு ஏற்றவாறு பிற விளங்குகளிடமிருந்து தன்னை வேறுபடுத்தி காட்டுவதற்கும், அடையாளச் சின்னமாகவும் சங்க கால மக்கள் உடையைப் பயன்படுத்தியுள்ளனர்.*

*பண்டைத் தமிழகத்தில் குறிஞ்சி, முல்லை நிலங்களில் வாழ்ந்த மக்கள் பூவையும், தழையையும் கோத்து ஆடையாக அணிவது வழக்கம். அவர்கள் கம்பளி ஆடைகளையும் அணிவதுண்டு. நகர மக்கள் பஞ்சாலும், பட்டாலும், ஒருவகை மலையெலி மயிராலும், வேறு சிறு விலங்குகளின் மயிராலும் ஆடைகள் நெய்தார்கள். அடியார்க்கு நல்லார் தம் சிலப்பதிகார உரையில் முப்பத்தாறு ஆடை வகைகளைக் குறிப்பிடுகின்றார் என்று (உலகத் தமிழர் பேரவை, சங்க காலத் தமிழரின் வாழ்க்கை முறை, பக்.4) என்ற கட்டுரையில் குறிப்பிட்டுள்ளது.*

*உண்ணுதல் தன் விருப்பத்திற்கேற்ப அமையலாம். ஆனால் உடுத்துதல் பிறர் விருப்பத்திற்கு ஏற்ப அமைய வேண்டும் (தமிழர் ஆடைகள் பக்கம்- 89) செல்வர்களும், அரசர்களும் அழகிய வேலைப்பாடு மிக்க நுண்ணிய பட்டாடைகளை தாமும் அணிந்து புலவர்களுக்கும் தானமாக வழங்கினர் என்ற செய்தியை,*

***பாசி வேரின் மாசொடு குறைந்த***
***துன்னற்சிதா அர் நீக்கித் தூய***
***கொட்டைக் கரைய பட்டுடை நல்கி (பொருநர்.,-153-155)***

*என்ற சங்கப்பாடல் உணர்த்துகிறது. இதன் மூலம் சங்ககால மக்கள் உடை பற்றிய சிந்தையை பெற்றிருந்தமையை அறியமுடிகின்றது.*

***சிறையுஞ் செற்றையும் புடையும் நளெழுந்த***
***பருத்திப் பெண்டீர் சிறு தீ விளக்கம் (புறம்., 326)***

*என்ற பாடல் சங்ககால மக்கள் பருத்தியினால் நெய்யப்பட்ட ஆடையை அணிந்து உள்ளமையை விளக்குகின்றது.*

*மேலும், இலைதழைகளையும் மலர்களையும் மரல்நாரிலும் நறை நாரிலும் தொடுத்துக் கட்டித் தழையுடையாகப் பெண்கள் அணிந்ததற்குச் சங்க இலக்கியங்கள் சான்றளிக்கின்றன. (இலையைத்தலையிலே உடைய கஞ்சங்குல்லையையும் (கஞ்சா) இலையை யுடைய நறிய பூங்கொத்துக் களையும் செவ்விய காலினையுடைய மராத்தினது வெள்ளிய*

*கொத்துக்களையும் நடு நடுவே வைத்து வண்டுகள் தேனையுண்ணும்படி தொடுத்த பெரிய குளிர்ந்த அழகினையுடைய தழையை வடங்கள் திருந்தும் அல்குலிடத்தே அசையும்படி உடுத்தனர்) என்று மகளிர் தழையுடையணிந்த செய்தியை நக்கீரர் கூறுகிறார், என்று வெ.பெருமாள்சாமி, சங்க காலத்தில் உடை, பக். 2) என்ற கட்டுரையில் குறிப்பிடுகின்றார்.*

**இருப்பிடம்**

*மனிதன் பாதுகாப்பாக வாழ்வதற்கு இருப்பிடம் அவசியம் இயற்கை சீற்றத்தில் இருந்து தன்னை காப்பதற்கும் இருப்பிடம் முதன்மையானதாகிறது. சங்க கால மக்கள் நிலத்திற்கு ஏற்ற மலைகள் குகைகள், மர வீடுகள், குடிசைகள் போன்ற இடத்தை பயன்படுத்தி உள்ள மையை அறியமுடிகின்றது.*

**சங்க கால மக்களின் தொழில்கள்**

*ஒவ்வொரு நிலத்தின் தன்மைக்கேற்ப மக்களின் வாழ்க்கை முறை ஒழுங்குபடுத்தப்பட்ட வாழ்வியலாக அமைந்திருந்தது. ஒவ்வொரு நிலத்திற்கும் தக்கபடி மக்கள் தொழில் செய்து வாழ்ந்து வந்தனர் என்பதனை சங்க இலக்கியங்கள் வழி அறியலாம்.*

- *குறிஞ்சி - தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல், வெறியாடல்*
- *முல்லை - ஏறு தழுவுதல், ஆநிரை மேய்த்தல்*
- *மருதம் - உழவுத்தொழில், நெல்லரிதல், களைபறித்தல்,புதுநீராடல்*
- *நெய்தல் - மீன் பிடித்தல், மீன் உணக்கல், உப்பு விளைவித்தல்*
- *பாலை - வழிப்பறி, பதற்கொள்ளை, நிரை கவர்தல்*

*ஒவ்வொரு நிலத்தின் பெயரும் அம்மக்கள் வாழும் நில சூழலுக்கு ஏற்பவும் தொழில்நோக்கியும் அமைந்துள்ளது.*

***பெயரும் வினையும் என்று ஆயிரு வகையின்***
***திணை தொரு மரீஇய திணை நிலைப் பெயரே***
***(தொல்.,பொருள்.,அகத்திணை.,நூற்பா,22)***

*என்று தொல்காப்பிய நூற்பா கூறுகிறது. இதன் மூலம் மக்கள் வாழ்ந்த நிலத்திற்கு ஏற்ப தொழில்களும் அமைந்துள்ளன.*

**முடிவுரை**

*நிலம், நீர் காற்று நெருப்பு ஆகாயம் போன்ற ஐம்பூதங்கள் மனித வாழ்விற்கு முக்கியமானதாகும். சங்க கால மக்கள் நிலத்திற்கு ஏற்ப தங்கள் வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டதை சங்க இலக்கியம் மூலம் காண முடிகின்றது. உணவு உடை இருப்பிடம் தொழில்கள் போன்றவையும் சங்ககால மக்களுக்கு உயிர் வாழவாதாரமாக அமைந்துள்ளதை இக்கட்டுரை விரிவாக விளக்குகின்றது.*

**துணை நூற்பட்டியல்**

1. *கா.புவனேஸ்வரி, சங்க கால உணவு முறைகள்., களஞ்சியம் சர்வ தேச தமிழ் ஆய்விதழ், பக்கம் - 3.*
2. *கு.வெ பாலசுப்பிரமணியன்., அ.மா பரிமணம்., (ப.ஆ.) புறநானூறு மூலமும் உரையும். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி).லிட், சென்னை, முதற்பதிப்பு, 2004.*

3. கு.வெ பாலசுப்பிரமணியன்., அ.மா பரிமணம்., (ப.ஆ.) நற்றிணை, மூலமும் உரையும். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி).லிட், சென்னை, முதற்பதிப்பு , 2004.
4. ச.வே சுப்பிரமணியன். தொல்காப்பியம் தெளிவுரை. மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை-60010.
5. சங்க காலத் தமிழரின் வாழ்க்கை முறை., உலகத் தமிழர் பேரவை
6. சூசை பிரகாசம்., பண்டைய தமிழர்களின் உணவு பழக்கவழக்கங்கள்., தமிழ் இணைய கல்வி கழகம்.
7. டாக்டர் கதிர் முருகு., பட்டினப்பாலை மூலமும் உரையும்., சாரதா பதிப்பகம்,சென்னை, 2011
8. டாக்டர் கதிர் முருகு., மதுரைக் காஞ்சி மூலமும் உரையும்., கௌரா பதிப்பகக் குழுமம், சாரதா பதிப்பகம், சென்னை.
9. தட்சிணாமூர்த்தி அ., தமிழர் நாகரிகமும் பண்பாடும்., வெற்றிச்செல்வி வெளியீட்டகம், தஞ்சாவூர், இரண்டாம் பதிப்பு 1980.
10. ப.சரவணன்.,பரிபாடல் ஆராய்ச்சி. கௌரா பதிப்பகம், சாரதா பதிப்பகம் சென்னை,2009
11. பரிமேலழகர்(உ.ஆ), திருக்குறள் (மூலமும், எளிய தமிழில் உரையும்), டெக்னோ புக் ஹவுஸ் சென்னை,2021.
12. முத்து.இராமமூர்த்தி., பத்துப்பாட்டு சிறுபாணாற்றுப்படை மூலமும் உரையும்., சாரதா பதிப்பகம், சென்னை, 2011.
13. முனைவர் கோ விசயராகவன் முனைவர் ஆ. மணவழகன். ஐம்பெரும் பூதத்து இயற்கை., அய்யனார் பதிப்பகம், சென்னை- 600088 முதல் பதிப்பு 2021.
14. வெ.பெருமாள்சாமி., சங்க காலத்தில் உடை., கீற்று இதழ்.,
15. ஸ்ரீ ராம்., பண்டைய கால தமிழர்களின் வாழ்க்கை முறை., தகவல் இணைய கல்வி கழகம்

**References**

1. Ka. Bhuvaneswari, “Sangam Period Food Practices,” Kalañjiyam All India Tamil Research Journal, p. 3.
2. Ku. Ve. Balasubramanyan, A. Ma. Parimanam (Eds.), Purananuru Text and Commentary, New Century Book House (P) Ltd., Chennai, First Edition, 2004.
3. Ku. Ve. Balasubramanyan, A. Ma. Parimanam (Eds.), Natrinai Text and Commentary, New Century Book House (P) Ltd., Chennai, First Edition, 2004.
4. Sa. Ve. Subramanyan, Tolkappiyam Commentary, Manikkavasagar Publications, Chennai-60010.
5. Lifestyle of Sangam Period Tamils, World Tamil Organization.
6. Susai Prakasam, Food Habits and Customs of Ancient Tamils, Tamil Internet Academy.
7. Dr. Kathir Murugu, Pattinappalai Text and Commentary, Sarada Publications, Chennai, 2011.
8. Dr. Kathir Murugu, Mathuraikanchi Text and Commentary, Gaura Publication Group, Sarada Publications, Chennai.
9. Dakshinamurthy A., Tamil Civilization and Culture, Vetrichselvi Publications, Thanjavur, Second Edition, 1980.
10. P. Saravanan, Paripadal Research, Gaura Publications, Sarada Publications, Chennai, 2009.
11. Parimelazhagar (Commentary), Thirukkural (Text and Simple Tamil Commentary), Techno Book House, Chennai, 2021.
12. Muthu Ramamurthy, Pathupattu Sirupanarruppadai Text and Commentary, Sarada Publications, Chennai, 2011.

13. Dr. Ko. Visayaragan, Dr. A. Manavalan, Nature of the Five Great Elements, Ayyamar Publications, Chennai-600088, First Edition, 2021.
14. Ve. Perumalswamy, "Clothing in Sangam Period," Keetru Magazine.
15. Sri Ram, Lifestyle of Ancient Tamils, Information Internet Academy.